# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 17.02.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ்வின் வல்லமையை வெளிப்படுத்தும் தோற்றம் எப்போதும் இருந்து வரும் மார்க்கமே உயிருள்ள மார்க்கமாகும். இன்று உயிருள்ள மார்க்கம் என்று தன்னைப் பற்றி வாதம் செய்வது மட்டுமல்லாமல் அதற்கான செயலளவிலான ஆதாரத்தையும் இஸ்லாம் மட்டுமே தருகிறது. இஸ்லாத்தின் இறைவன் இப்போது கூட தான் விரும்புகின்ற எவரையும் தன்னோடு பேசுபவராக ஆக்கிக் கொள்ளலாம். அவரிடம் அவன் பேசுகின்றான். அவர் செய்கின்ற துஆக்களை கேட்கின்றான். அதற்கு பதில் அளிக்கின்றான். தனது வல்லமையின் தோற்றத்தை வெளிப்படுத்திக் காட்டுகின்றான். இந்தக் காலத்தின் தனது வல்லமையை வெளிப்படுத்திக் காட்டுவதற்காக தனது வாக்குறுதியை நிறைவு செய்தவாறு, அது நிறைவேறுவது தொடர்பான செய்தியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அறிவித்து, அதற்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பி வைத்தான்.

இன்று முஸ்லிம்களில், இன்றும் இறைவனை, அவன் தனது எல்லா பண்புகளுடனும், வல்லமையுள்ளவனாகவும் ஆற்றல் படைத்தவனாகவும் இருக்கின்றான் என்று அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தே உறுதி கொண்டுள்ளது. இன்றும் இறைவன் அவன் தொன்றுதொட்டே வெளிப்படுத்திக் காட்டிய அதே வல்லமையை உடையவனாகவும் இருக்கின்றான்; அதே வல்லமையை வெளிப்படுத்திக் காட்டிக் கொண்டே இருக்கின்றான். ஆனால், காத்தமுல் அன்பியாவான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோற்றத்திற்குப் பிறகு, இப்போது எல்லா விதமான அருள்களைப் பெறுவதற்குரிய வழியும், அல்லாஹ் வரை சென்றடைவதற்கான பாதையும் ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மூலமாகத்தான் கிடைக்கும் என்பதை விதித்துள்ளான். வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முழுமையான உண்மைப் பேரன்பராக இருக்கின்றார்கள். அவர்களை இறைவன் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக இந்தக் காலத்தில் அனுப்பினான். பிறகு அவர்கள் மூலமாக நேர்வழியை எட்ட வைக்கின்ற பணி நிறைவடையும் என வாக்குறுதி அளித்தான்.

**இந்த உயிருள்ள இறைவன் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது நூலில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

இந்த வல்லமைமிக்க உண்மையான, முழுமையான இறைவனை நமது ஆன்மாவும், நமது உடலிலுள்ள ஒவ்வொரு அணுக்களும் ஸஜ்தா செய்கின்றன. அவனது கைகளாலேயே ஒவ்வொரு ஆன்மாவும், படைப்பினங்களிலுள்ள ஒவ்வொரு அணுவும் தனது ஆற்றல்களுடன் வெளிப்பட்டன. அவனது இருப்பின் மூலமாகவே எல்லா பொருள்களும் நிலைத்திருக்கின்றன. எந்தவொரு பொருளும் அவனது அறிவிற்கும் ஆதிக்கத்திற்கும் வெளியில் இல்லை. அவை அவனது படைக்கும் தன்மையை விட்டும் வெளியில் இல்லை. ஆயிரக்கணக்கான தரூதும், சாந்தியும், கருணையும், அருள்களும் இந்த தூய நபி (ஸல்) அவர்கள் மீது இறங்கட்டுமாக! இவர்கள் மூலமாகவே நாம் அந்த உயிருள்ள இறைவனைப் பெற்றுக் கொண்டோம். அவன் பேசுவதன் மூலமாக அவனது இருப்பிற்கான அடையாளத்தை அவனே வெளிப்படுத்திக் காட்டுகின்றான். வழக்கத்திற்கு அப்பாற்பட்ட ஒரு அடையாளத்தை வெளிப்படுத்திக் காட்டி தொன்று தொட்டு இருந்து வருகின்ற முழுமையான தனது ஆற்றல்களையும் சக்திகளையும் வெளிப்படுத்தி தனது பிரகாசிக்கின்ற முகத்தை அவன் நமக்கு காட்டுகின்றான். இவ்வாறு இறைவனை நமக்கு காட்டித் தந்த அத்தகைய நபியை நாம் பெற்றுள்ளோம். தனது முழுமையான ஆற்றல் மூலமாக ஒவ்வொரு பொருளையும் உருவாக்கிய ஒரு இறைவனை நாம் பெற்றுள்ளோம். அவனது வல்லமை எத்தகைய மகிமையை தன்னகத்தே கொண்டுள்ளது!

அது அல்லாமல் எந்தப் பொருளும் தான் நிலைத்திருக்கும் அந்த வடிவத்தைப் பெற முடியாது. அவனது ஆதரவு இல்லாமல் எந்தப் பொருளம் நிலைத்திருக்க முடியாது. அவன் நமது உண்மையான இறைவன் ஆவான். அவன் எண்ணற்ற அருள்களை உடையவன். எண்ணற்ற ஆற்றல்களை உடையவன். எண்ணற்ற அழகை உடைவன். அருள் செய்பவன். அவனைத் தவிர வேறு எந்த இறைவனும் இல்லை.

நமது நபியே கரீம் (ஸல்) அவர்கள் காட்டித்தந்த இவனே நமது உயிருள்ள இறைவனாவான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களின் உயர் தகுதி தொடர்பாக ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

நாம் நீதியின் பார்வையுடன் பார்க்கும் போது அனைத்து நபிமார்களின் தொடரிலும் மிக உயர்ந்த தகுதியைப் பெற்ற வீரமிக்க ஆண் மகனாகத் திகழ்ந்த நபியாகவும், உயிருள்ள நபியாகவும், உயர்ந்த தகுதியை அடைந்துள்ள இறைவனது நேசமிக்க நபியாகவும் ஒரேயொரு ஆண் மகனைத்தான் அறிந்துள்ளோம். அதாவது அவரே நபிமார்களின் தலைவர் ஆவார்கள். தூதர்களின் பெருமையாவார்கள். எல்லா தூதர்களின் மணிமகுடம் ஆவார்கள். அவர்களது பெயர் முஹம்மது முஸ்தஃபா அஹ்மதே முஜ்தஃபா (ஸல்) ஆகும். அவர்களது நிழலின் கீழ் 10 நாட்கள் வழி நடப்பதன் மூலம் இதற்கு முன்னர் ஆயிரம் வருடங்கள் வரை கிடைக்காமல் இருந்த அந்த ஒளி கிடைக்கின்றது.

பிறகு அவர்கள் முழு உலகத்தையும் இஸ்லாத்தின் பக்கம் அழைத்தவாறு கூறுகின்றார்கள்: பூமியில் வாழ்கின்ற மக்களே! கிழக்கிலும் மேற்கிலும் குடி அமர்ந்துள்ள மனித ஆன்மாக்களே! நான் முழுமையான வலுவுடன் உங்களை இதன் பக்கம் அழைக்கின்றேன். இப்போது பூமியில் உண்மையான மார்க்கம் இஸ்லாம் மட்டுமே ஆகும். திருக்குர்ஆன் கூறியுள்ள அந்த இறைவன்தான் உண்மையான இறைவன் ஆவான். நிரந்தரமாக ஆன்மீக வாழ்வைப் பெற்றிருக்கும் நபி, கம்பீரம் மற்றும் புனிதத் தன்மையின் சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள். அவர்களது ஆன்மீக வாழ்வு தூய்மையான கம்பீரத்திற்கு நமக்கு கிடைத்துள்ள ஆதாரம் என்னவென்றால் அவர்களைப் பின்பற்றுவதன் மூலமாகவும், அன்னார் மீது அன்பு கொள்வதன் மூலமாகவும் நமக்கு பரிசுத்த ஆவியின் தொடர்பு, இறைவன் நம்முடன் பேசுகின்ற நற்பாக்கியம், வானத்தின் அடையாளங்கள் ஆகிய அருட்கொடைகளைப் பெறுகிறோம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இஸ்லாத்தின் ஒரு வெற்றி பெற்ற தளபதி என்ற நிலையில் இஸ்லாத்தின் எதிரிகளின் வாயை அடைக்கச் செய்துள்ளார்கள். ஆதாரங்கள், தெளிவுறைகள் மூலமாக மட்டும் அல்லாமல் அல்லாஹ்வின் சிறப்பான உதவிகள், அடையாளங்கள் ஆகியவற்றைக் காட்டி அவ்வாறு செய்துள்ளார்கள். உலகின் முன்பாக அந்த விஷயங்களை வைத்தார்கள். எப்படிப்பட்ட முன்னறிவிப்புகளை செய்தார்கள என்றால் மறைவானவற்றை அறிந்த இறைவனைத் தவிர வேறு எவரும் அதுபற்றி அறிந்திருக்கவே முடியாது. அந்த இறைவனிடம் இருந்து செய்தியைப் பெற்று அவர்கள் அறிவித்த முன்னறிவிப்புகள் யாவும் அல்லாஹ்வின் எத்தகைய மகத்தான உதவிகளின் அடையாளங்கள் மூலம் நிறைவேறின என்பதை உலகம் கண்டது. அவர்களுக்கு இஸ்லாம் தொடர்பாக எத்தகைய வேதனை இருந்தது? இஸ்லாத்தின் எதிரிகள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் தகுதியை வீழ்த்துகின்றவர்கள் ஆகியோரிடம் பேசி அவர்களுக்கு அன்னார் எவ்வாறு புரிய வைத்தார்கள்? பிறகு இறைவன் முன்னால் எத்தகைய துடிப்புடன் இந்த எதிரிகளின் வாயை அடைப்பதற்காக துஆக்களை செய்தார்கள்? இதுபற்றிய விஷயங்கள் சஹாபாக்கள் மூலம் அறிவிப்புகளில் உள்ளன. இதிலிருந்தும் அவர்கள் வாழ்க்கை பற்றி நாம் அறிகின்றோம். அவர்களது பல்வேறு நூல்களிலும் இதுபற்றி அதிகமாக கூறப்பட்டிருக்கின்றது. எதிரிகளின் வாயை அடைப்பதற்காக அல்லாஹ்வின் முன்னிலையில் அவனது உதவியின் அடையாளங்களை வேண்டியவாறு அவர்கள் செய்துள்ள எண்ணற்ற துஆக்களும் அதில் உள்ளன. தனது பெருமைக்காக அல்லாமல் இஸ்லாத்தின், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறப்பை நிரூபிப்பதற்காக அவர்களிடம் ஒரு ஆர்வமும் துடிப்பும் இருந்தது. அதன் காரணமாக அவர்கள் துஆ செய்தார்கள். இந்த அடையாளங்களில் ஒரு அடையாளம்தான் இறைவன் அவர்களது துஆக்களின்

காரணமாக அவர்களுக்கு வழிகாட்டியவாறு அவர்களை ஹோஸ்யார்பூர் சென்று அங்கு தனிமையில் இறைவணக்கத்தில் ஈடுபடும்படி அன்னாரிடம் கூறியதாகும்.

இந்த தனிமையான இறைவணக்கத்தில் அவர்கள் ஈடுபட்டிருந்த சமயத்தில் ஒரு அடையாளத்தை அல்லாஹ் அவர்களுக்கு வழங்கினான். அது ஒரு வாக்களிக்கப்பட்ட மகன் தொடர்பான அடையாளமாகும். இதனை ஒவ்வொரு அஹ்மதியும் முஸ்லிஹ் மவ்வூது தொடர்பான முன்னறிவிப்பு என்ற பெயரால் அறிந்துள்ளார். இது ஒரு மகத்தான முன்னறிவிப்பாகும். ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் அந்த மகன் பிறப்பது, அந்த மகனிடம் முன்னறிவிப்பில் கூறப்பட்டுள்ள அந்த சிறப்பம்சங்கள் இருப்பது, அவர் நீண்ட ஆயுளைப் பெறுவது ஆகிய இவையனைத்தும் ஒரு மகத்தான முன்னறிவிப்பிற்கு ஆதாரமாகத் திகழ்கின்றன. பிற்காலத்தில் வரக்கூடியவர்களுக்கு இந்த முன்னறிவிப்பு நிச்சயமாக அவர்களது ஈமான் உறுதியாவதற்கு காரணமாக அமையும். அவர்கள் சொல்லுக்குச் சொல் இந்த முன்னறிவிப்பு நிறைவேறியிருப்பதை பார்த்துள்ளார்கள். இந்த முன்னறிவிப்பில் தனது வாக்களிக்கப்பட்ட மகன் செய்யவிருக்கின்ற பல்வேறு வகையான பணிகள் தொடர்பாக அவர்கள் கூறியிருந்தார்கள். அது முஸ்லிஹ் மவ்வூது மூலமாக நிறைவேறியதை அவர்கள் பார்த்தார்கள்.

**இப்போது நான் இந்த முன்னறிவிப்பில் உள்ள சொற்களை உங்கள் முன் வைக்கிறேன். இந்த முன்னறிவிப்பு மஜ்முயே இஸ்திஹாரத்தின் பாகம் 1–ல் இடம்பெற்றுள்ளது.**

**கருணையுள்ள கண்ணியமிக்க இறைவனிடமிருந்து பெற்ற இல்ஹாமிலுள்ள முதல் முன்னறிவிப்பு இதுவாகும். கண்ணியமிக்க வல்லமையுள்ள இறைவன் இல்ஹாம் மூலமாக என்னை நோக்கி இவ்வாறு கூறினான்.**

நீ என்னிடம் கேட்டதற்கிணங்க ஓர் கருணையின் அடையாளத்தை நான் உனக்கு தருகின்றேன். நான் உன்னுடைய மன்றாடல்களைக் கேட்டேன். மேலும் உனது துஆக்களுக்கு என்னுடைய ரஹ்மத்தினால் அவை ஏற்றுக் கொள்ளப்படும் தகுதியை வழங்கினேன். ஹோஸியார்பூர் மற்றும் லூதியானாவிற்கு நீர் மேற்கொண்ட உமது பயணத்தை உனக்கு அருளுக்குரியதாக ஆக்கி விட்டேன். ஆகவே, உனக்கு இறைவனின் வல்லமை, கருணை, நெருக்கம் ஆகியவற்றின் அடையாளம் கொடுக்கப்படுகிறது. அருள் மற்றும் பேருபகாரத்தின் அடையாளம் உமக்கு வழங்கப்படுகிறது. மேலும் வெற்றியின் திறவுகோல் உமக்கு கிடைக்கின்றது. வெற்றி பெற்றவரே! உம் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக! இறைவன் இதை கூறினான். இதன் மூலம் வாழ்க்கையை விரும்புபவர்கள் மரணத்தின் பிடியிலிருந்து இரட்சிப்பு பெற வேண்டும். கல்லறைகளில் புதைந்து கிடப்பவர்கள் வெளியில் வர வேண்டும். அதன் மூலம் இஸ்லாம் மார்க்கத்தின் சிறப்பும் இறைவனின் வார்த்தையின் உயர் தகுதியும் வெளிப்பட வேண்டும். அதன் மூலம் உண்மை அதன் அனைத்து பரக்கத்துகளுடன் வர வேண்டும். மேலும் பொய் தனது அனைத்து தீய சகுனங்களுடன் ஓடிவிட வேண்டும். மேலும் அதன் மூலம் நான் வல்லமையுள்ளவன். எதை விரும்புகின்றேனோ அதை செய்பவன் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். நான் உன்னுடன் இருக்கின்றேன் என்பதன் மீது அவர்கள் உறுதிகொள்ள வேண்டும். எவர்களுக்கு இறைவனின் இருப்பின் மீது நம்பிக்கையில்லையோ, மேலும் எவர்கள் இறைவனையும், இறைவனின் மார்க்கத்தையும், இறைவனின் தூதர் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களையும் மறுத்தல் மற்றும் பொய்ப்படுத்துதல் ஆகியவற்றின் பார்வையுடன் பார்க்கின்றார்களோ அவர்களுக்கு ஒரு திறந்த அடையாளம் கிடைக்க வேண்டும். குற்றவாளிகளின் திட்டமும் வெளிப்பட்டு விட வேண்டும். உமக்கு நற்செய்தி தரப்படுகின்றது. ஒரு அழகான தூய மகன் உமக்கு வழங்கப்படுவார். ஒரு தூய புதல்வர் உமக்கு கிடைப்பார். உமது வித்திலிருந்து தோன்றியவராகவும் உமது சந்ததி மற்றும் வம்சத்தைச் சார்ந்தவராகவும் இருப்பார். அழகிய தூய மகன் உமது விருந்தாளியாக வருகின்றார். அவரது பெயர் இம்மானுவேல் மற்றும் பஷீராகவும் இருக்கின்றது. அவருக்கு புனித ஆன்மா வழங்கப்பட்டுள்ளது. அவர் அசுத்தத்திலிருந்தும் தூய்மையடைந்தவராவார். அவர் அல்லாஹ்வின் ஒளியாவார். விண்ணிலிருந்து வருகின்ற அவர் அருளுக்குரியவர் ஆவார். அவருடன் அருள் இருக்கின்றது. அந்த அருள் அவருடன் சேர்ந்து வரும். அவர் ஆற்றல் உடையவராகவும், மகத்துவமிக்கவராகவும், செல்வம் படைத்தவராகவும் இருப்பார்.

அவர் உலகத்திற்கு வருவார். தனது குணப்படுத்தும் தன்மையாலும் உண்மையான ஆன்மாவின் பரக்கத்தாலும் பலரையும் நோய்களிலிருந்து குணப்படுத்துவார். அவர் அல்லாஹ்வின் வார்த்தையாவார். ஏனென்றால், இறைவனின் கருணையும் அவனது தன்மான உணர்வும் அவரை மகத்துவமிக்க வார்த்தைகளுடன் அனுப்பியிருக்கின்றது. அவர் மிகுந்த புத்திக்கூர்மை உள்ளவராகவும் சிந்தித்துப் புரியும் ஆற்றல் மிக்கவராகவும் இருப்பார். மென்மையான உள்ளம் கொண்டவராகவும் இருப்பார். வெளிப்படையாக மற்றும் அந்தரங்கமான அறிவுகளால் அவர் நிரப்பப்படுவார். அவர் மூன்றை நான்காக்குவார். (இதன் பொருள் புரியவில்லை என்று அவர்கள் எழுதியுள்ளார்கள்.) திங்கட்கிழமை அருளுக்குரிய திங்கட்கிழமை. உமது பாசத்திற்குரிய அப்புதல்வர் மதிப்பிற்கும், மேன்மைக்கும் உரியவர் ஆவார். அவரிடமிருந்தே முதலும் இறுதியும் வெளிப்படும். அவரிடமிருந்தே உண்மையும் உயர்வும் வெளிப்படும். இறைவனே விண்ணிலிருந்து இறங்கி வந்தது போன்று அது இருக்கும். அவருடைய வருகை அருளுக்குரியதாக இருக்கும். அது இறைவனின் கம்பீரம் வெளிப்படுவதற்கு காரணமாக அமையும். ஒளி வருகின்றது. அதனை இறைவன் தனது திருப்தியின் நறுமணத்தால் நறுமணம் கமழும்படி செய்தான். நாம் நமது ஆவியை அவர் மீது இடுவோம். இறைவனின் நிழல் அவரது தலைமேல் இருக்கும். அவர் மிக விரைவாக வளர்வார். கைதிகளின் விடுதலைக்கு காரணமாக இருப்பார். பூமியின் எல்லை வரை அவரது புகழ் பரவிவிடும். சமுதாயங்கள் அவரிடமிருந்து அருள்களைப் பெறும். அப்போது தனது இறுதி நோக்கத்தை நிறைவு செய்தவாறு அவர் வானத்தின் பக்கம் உயர்த்தப்படுவார். வ கான அம்ரன் மக்ஸிய்யா இது விதிக்கப்பட்ட ஒன்றாகும்.

நான் ஏற்கனவே கூறியிருப்பது போன்று இந்த முன்னறிவிப்பிற்கு முற்றிலும் பொருந்தக்கூடியவர்களாக ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இருந்தார்கள். அவர்கள்தான் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி ஆவார்கள் என்பதை இறைவன் அவர்களிடம் கூறியபோது, அன்னார் 1944 ம் வருடம் இது தொடர்பாக அறிவித்தார்கள். இந்த முன்னறிவிப்பு நிறைவேறி விட்டது என்ற மகிழ்ச்சியில் முஸ்லிஹ் மவ்வூது தினமும் நடத்தப்படுகிறது. இனி வரும் நாட்களில் இந்த கூட்டங்கள் பல்வேறு ஜமாஅத்துகளில் நடைபெறும். ஏனென்றால் இது ஒரு மகத்தான முன்னறிவிப்பாகும். அது மிகுந்த மகிமையுடன் நிறைவேறியுள்ளது என்பதைப் பற்றி ஜமாஅத்திலுள்ள ஒவ்வொரு நபரும் தெரிந்திருக்க வேண்டும். உலகத்தின் சுற்றுச்சூழலின் தாக்கத்திற்கு ஆளாகி சிலர் இதுபற்றி நான் முன்னர் கூறியிருந்தும் கூட கேள்விகள் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். பிறந்த நாள் தொடர்பாக இவர்கள் கேள்வி கேட்கின்றார்கள். தங்களது பிறந்த நாளும் கொண்டாடப்பட வேண்டும் என்ற விருப்பம் இவர்களுக்கு இருக்கின்றது. மார்க்க அறிவும் போதுமான அளவில் இல்லை. சுற்றுச்சூழலின் தாக்கத்திற்கு ஆளாகியுள்ள இவர்கள் நாம் முஸ்லிஹ் மவ்வூது தினம் கொண்டாடுகின்ற போது மற்ற கலீஃபாக்களின் தினத்தை ஏன் கொண்டாடுவதில்லை? பிறகு பிறந்த நாள் ஏன் கொண்டாடுவதில்லை? என்று கேட்கின்றனர். அதாவது மற்ற கலீஃபாக்களின் பிறந்த நாளின் போர்வையில் தங்களது பிறந்த நாள் கொண்டாடுவதன் பக்கம் இவர்கள் செல்ல விரும்புகின்றனர். இங்கு நான் இதனை தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது அவர்களின் பிறந்த நாள் கொண்டாடப்படவில்லை. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 1889 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12ம் தேதி பிறந்தார்கள். இந்த மகத்தான முன்னறிவிப்பு அவர்கள் பிறப்பதற்கு மூன்று வருடங்கள் முன்பு செய்யப்பட்டதாகும். அந்த முன்னறிவிப்பு நிறைவேறியிருப்பதையொட்டி அந்த முன்னறிவிப்பின் தினம் கொண்டாடப்படுகிறது. இந்த முன்னறிவிப்பு 1886 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20ம் தேதி செய்யப்பட்டதாகும். இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக இந்த முன்னறிவிப்பு செய்யப்பட்டது. இவ்வகையில் இந்த முன்னறிவிப்பு ஒரு மைல் கல்லின் தகுதியைப் பெற்றுள்ளது. இந்த விளக்கத்திற்குப் பிறகு இந்த முன்னறிவிப்பு தொடர்பாக இரு விஷயங்களை நான் கூற விரும்புகின்றேன். இந்த முன்னறிவிப்பில் பல அம்சங்கள் உள்ளன. அவை விளக்கிக் கூறப்படுகிறது. ஆனால் இப்போது நான் இரண்டு விஷயங்களைக் கூறுவேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் யாரை வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி என்று கூறியுள்ளார்கள்? ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களது நிலை, அவர்களது உள்ளத்தின் நிலை இஸ்லாம் தொடர்பாகவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாகவும், முஸ்லிம் உம்மத் தொடர்பாகவும் எப்படி இருந்தது? என்பதைப்

பற்றியும் கூறவுள்ளேன். இந்த முன்னறிப்பில் உள்ள அம்சங்களை எடுத்தால் ஏறக்குறைய 52 அம்சங்கள் உள்ளன. அவற்றை விளக்கிக் கூற நேரமில்லை. எனவே, இந்த இரண்டு விஷயங்களை நான் கூறுவேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மத் (ரலி) அவர்களை வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி தொடர்பான முன்னறிவிப்பிற்கு முற்றிலும் பொருந்தக்கூடியவர் என்று கூறியுள்ளார்கள். இவ்வாறே அவர்கள் நம்பினார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ரூஹானி கஸாயினின் 15வது பாகத்தில் இடம் பெற்றுள்ள தரியாகுல் குலூப் என்ற நூலில் 219வது பக்கத்தில் அவர்கள் கூறுகின்றார்கள். எனது மூத்த மகனான மஹ்மூது பிறப்பது தொடர்பாக 1888 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10ம் தேதி வெளியிடப்பட்ட பிரசுரத்திலும் 1888 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒன்றாம் தேதி வெளியிடப்பட்ட பிரசுரத்திலும் முன்னறிவிப்பு செய்யப்பட்டிருந்தது. அந்தப் பிரசுரம் பச்சை நிறத்தாளில் அச்சடிக்கப்பட்டிருந்தது. அதில், பிறக்கப் போகும் இந்த பையனுக்கு மஹ்மூது என்று பெயர் வைக்கப்படும் என்றும் எழுதப்பட்டிருந்தது. மஹ்மூது பிறப்பதற்கு முன்னரே இந்தப் பிரசுரம் வெளியிடப்பட்டு இலட்சக்கணக்கான மனிதர்களுக்கு அது தெரிய வந்துள்ளது.

இதுவரை நமது எதிரிகளின் வீட்டில் கூட இந்தப் பச்சைப் பிரசுரம் நூற்றுக் கணக்கில் இருக்கும். அவ்வாறே 1888 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10ம் தேதி வெளியிடப்பட்ட பிரசுரமும் கூட ஒவ்வொருவரது வீட்டிலும் இருக்கும். பிறகு இந்த முன்னறிவிப்பு பற்றிய புகழ் பிரசுரங்கள் மூலம் முழுமையான நிலையை அடைந்த பிறகு முஸ்லிம்கள், கிறித்தவர்கள், இந்துக்கள் ஆகியோரது எந்தப் பிரிவும் இந்த செய்தி பற்றி தெரியாமல் இருக்கவில்லை. இப்போது இறைவனது அருளாலும் கருணையாலும் 1889 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் தேதி அதாவது ஹிஜ்ரி 1306 ஆம் ஆண்டு ஜமாத்தியுல் அவ்வல் 9ம் தேதி சனிக்கிழமை அன்று மஹ்மூது பிறந்தார். இவர் பிறப்பது தொடர்பாக நான் இந்த பிரசுரத்தில் தெரிவித்திருந்தேன். அப்பிரசுரத்தின் தலைப்பு, தக்மீலே தப்லீக் அதாவது, பிரசுரத்தை நிறைவு செய்தல் என்று தடித்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது. அப்பிரசுரத்தில் பைஅத்திற்கான பத்து நிபந்தனைகளும் இடம் பெற்றுள்ளன. அதன் நான்காவது பக்கத்தில் வாக்களிக்கப்பட்ட மகன் தொடர்பாக இந்த இல்ஹாமும் இடம் பெற்றுள்ளது. அது பார்ஸி மொழியில் உள்ளது.

ஏக் ஃபக்ரே ருஸுல் குர்பு தூ மஃலூமம் ஷீத் - தூதர்களின் பெருமைக்குரியவரே! இறைவனது பார்வையில் உமக்கு இருக்கும் நெருக்கமான தகுதி பற்றி எனக்கு தெரிந்து விட்டது. நீர் காலம் தாழ்த்தி வந்துள்ளீர். மிகத் தொலைவான பாதையைக் கடந்து வந்துள்ளீர்.

பிறகு தனது நூலான சிராஜும் முனீர் -ல் இந்த நூல் ரூஹானி கஸாயினின் 12வது பாகத்தில் உள்ளது. அதன் 36வது பக்கத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஐந்தாவது முன்னறிவிப்பாக நான் எனது மகன் மஹ்மூதின் பிறப்பு தொடர்பாக கூறியிருந்தேன். அவர் பிறக்கும்போது அவருக்கு மஹ்மூது என்று பெயர் வைக்கப்படும். இந்த முன்னறிவிப்பை வெளியிடுவதற்காக பச்சை நிற பக்கத்தை உடைய பிரசுரம் வெளியிடப்பட்டது. அது இதுவரை நம்மிடம் இருக்கின்றது. ஆயிரக்கணக்கான மக்களிடம் இது விநியோகம் செய்யப்பட்டுள்ளது. முன்னறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்த அந்த காலகட்டத்திற்குள் அந்த மகன் பிறந்தார். இப்போது அவருக்கு வயது 9 ஆகும்.

பிறகு தனது நூலான ஹகீகத்துல் வஹி, இது ரூஹானி கஸாயினின் 22வது பாகத்தில் உள்ளது. இந்த நூலின் 373 வது பக்கத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அவ்வாறே நமது மகன் மரணமடைந்த போது (அதாவது வாக்களிக்கப்பட்ட மகன் பிறப்பதற்கு முன்னர் ஒரு மகன் இறந்து போனார்). அறிவற்ற மவ்லவிகளும் அவர்களது நண்பர்களும், கிறித்தவர்களும், இந்துக்களும் அவர் மரணமடைந்ததையொட்டி மிகுந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். அப்போது மீண்டும் மீண்டும் அவர்களிடம் 1886 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20ம் தேதி வெளியிடப்பட்ட முன்னறிவிப்பில், சில ஆண் மக்கள் இறந்தும் போவார்கள் என்ற முன்னறிவிப்பும் உள்ளது என்று எடுத்துக் கூறப்பட்டது. எனவே,

ஒரு மகன் குறைந்த வயதில் இறந்து போக வேண்டியது அவசியமானதாக இருந்தது. அவ்வாறிருந்தும் மக்கள் ஆட்சேபனைகளைச் செய்வதிலிருந்தும் விலகவில்லை. அப்போது இறைவன் எனக்கு இன்னொரு மகன் தொடர்பாக ஒரு நற்செய்தியை வழங்கினான். எனது பச்சை பிரசுரத்தின் 7வது பக்கத்தில் இந்த இரண்டாவது மகன் பிறப்பது தொடர்பாக இரண்டாவது பஷீர் வழங்கப்படும். அவரது இன்னொரு பெயர் மஹ்மூதாகும் என்ற நற்செய்தியும் எனக்கு தரப்பட்டிருந்தது. அவர் இதுவரை அதாவது 1888 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதி வரை பிறக்கவில்லை என்றாலும் இறைவனின் வாக்குறுதிக்கேற்ப அவர் தனக்குரிய காலக்கட்டத்திற்குள் கண்டிப்பாக பிறப்பார். வானம், பூமி ஆகியவை மாறி விடலாம். ஆனால் அவனது வாக்குறுதிகள் மாறுவது என்பது சாத்தியமற்றதாகும். இது பச்சை பிரசுரத்தின் 7வது பக்கத்திலுள்ள மேற்கோளாகும். ஹகீகத்துல் வஹியில் இந்த மேற்கோளை அன்னார் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: இதற்கேற்ப 1889 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இந்த மகன் பிறந்தார். அவருக்கு மஹ்மூது என்று பெயர் வைக்கப்பட்டது. அவர் இதுவரை அல்லாஹ்வின் அருளால் உயிருடன் இருக்கின்றார். அவர் தனது 17வது வயதை அடைந்துள்ளார்.

ரூஹானி கஸாயினின் 15வது பாகத்திலுள்ள திரியாகுல் குலூப் என்ற நூலின் 214 வது பக்கத்தில் அவர்கள் கூறுகின்றார்கள்:

எனது முதல் மகன் உயிருடன் இருக்கின்றார். அவரது பெயர் மஹ்மூது ஆகும்.

அவர் பிறக்காமல் இருந்த அந்த சமயத்தில் எனக்கு கஷ்ஃப் மூலம் அவர் பிறப்பது தொடர்பான செய்தி தரப்பட்டது. நான் பள்ளிவாசலின் சுவரில் மஹ்மூது என்ற அவர் பெயர் எழுதப்பட்டிருப்பதைப் பார்த்தேன். அப்போது நான் இந்த முன்னறிவிப்பை வெளியிடுவதற்காக பச்சை நிறத்தில் ஒரு பிரசுரத்தை அச்சடித்து வெளியிட்டேன். அது வெளியிடப்பட்ட தேதி 1888 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1ம் தேதியாகும். ஆயிரக்கணக்கான மக்களுக்கு தெரியும் வகையில் இந்தப் பிரசுரம் 1888 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1ம் தேதி வெளியிடப்பட்டது. இதுவரை இந்த பிரசுரங்கள் அதிகமாக என்னிடம் உள்ளன. பிறகு ரூஹானி கஸாயினின் 11வது பாகத்தின் 299வது பக்கத்தில் உள்ள ஸமீமா அஞ்சாமே ஆத்தம் என்ற நூலில் அவர்கள் கூறுகின்றார்கள்:

பிறகு இன்னொரு அடையாளம் இதுவாகும். இப்போது மூன்று மகள்கள் உள்ளனர். இவர்களில் ஒவ்வொருவரும் பிறப்பதற்கு முன்பும் அவர்களது வருகை தொடர்பாக எனக்கு முன்னதாகவே செய்தி தெரிவிக்கப்பட்டது.

எனது மூத்த மகனான மஹ்மூதின் பிறப்பு தொடர்பாக இந்த பச்சை பிரசரத்தில் விளக்கமான முன்னறிவிப்பு மஹ்மூது என்ற பெயருடன் வெளியிடப்பட்டுள்ளது. அது அவருக்கு முன்னர் பிறந்த மகனின் மரணம் தொடர்பாக வெளியிடப்பட்டதாகும். ஒரு பத்திரிகை போன்று பல பக்கங்களைக் கொண்ட பிரசுரமாக அது இருந்தது. பச்சை நிறத்தில் அந்த பிரசுரங்கள் இருந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது மகனான ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது அவர்களை வாக்களிக்கப்பட்ட மகனாக கருதி வந்தார்கள். அவர் உலகில் ஒரு புரட்சியை ஏற்படுத்த வேண்டியதிருந்தது. இன்றும் சில மக்கள் இது தொடர்பாக ஆட்சேபனை செய்வதால் நான் இதுபற்றி விளக்கிக் கூறியுள்ளேன்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அல் முஸ்லிஹுல் மவ்வூது அவர்களின் 52 வருட கிலாஃபத் காலகட்டம் இந்த மகத்தான முன்னறிவிப்பு நிறைவேறி இருப்பதற்கான ஒரு உயிருள்ள சான்றாக திகழ்கின்றது.

அவர்களது எழுத்துக்களும், அவர்களது சொற்பொழிவுகளும் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் தகுதியை நிலைநாட்டுவதற்காக அவர்களது உள்ளத்திலிருந்த அந்த வேதனையால் நிரம்பி காணப்படுகின்றது. அவர்களது அறிவும், ஞானமும் இந்த விஷயத்திற்கு உயிருள்ள

சான்றாகத் திகழ்கின்றது. அல்லாஹ் அவர்களை அந்தரங்கம் மற்றும் வெளிப்படையான அறிவுரைகளால் நிரப்பி இருந்தான். சுருக்கமாக அவர்கள் தொடர்பாக 52 சிறப்புகள் அல்லது இன்னும் சில கோணங்களில் 58 சிறப்பு அம்சங்கள் எடுத்துக் கூறப்படுகிறது. அவற்றை ஆய்வு செய்து பார்க்கும் போது முன்னறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்த ஒவ்வொரு சிறப்பும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களது வாழ்க்கையில் நமக்கு தென்படுகின்றது. நான் ஏற்கனவே கூறியிருந்தபடி இது தொடர்பாகவும் நான் சில விஷயங்களைக் கூறுவேன். அவர்களது சொற்பொழிவுகளிலிருந்தும் சில மேற்கோள்களை நான் எடுத்து வைக்கின்றேன். அதிலிருந்தும் அவர்களது மகத்தான உறுதிமிக்க எண்ணமும் மிளிர்கின்றது. உறுதிமிக்க எண்ணம் கொண்டவர்களாக அவர்கள் இருந்தார்கள் என்பதை அது நமக்கு தெரிவிக்கின்றது.

**ஓரிடத்தில் ஒரு சொற்பொழிவின்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

அல்லாஹ்வின் தூதர்கள் வரும்போது அவரது ஜமாஅத்தில் நுழைகின்ற ஒவ்வொரு நபரும் மார்க்கத்தின் பணியை என்னைத் தவிர வேறு எவரும் செய்யக் கூடாது என்று நினைக்கின்றார். இதை அவர் புரிந்து பிறகு இந்தப் பணியை நிறைவடையச் செய்வதற்காக அவர் தனது எல்லா ஆற்றல்களையும் செலவழிக்கின்றார். மேலும் அவர் பைத்தியக்காரராக ஆகிவிடுகின்றார் என்றுதான் கூற வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மரணமடைந்த போது அவர்களது மரணம் அகால மரணமாக இருந்தது என்பன போன்ற குரல்கள் எழுவதை நான் கேட்டேன். அவ்வாறு கூறுபவர்கள் அன்னார் தொடர்பாக அவர்கள் பொய்யர் (நவூதுபில்லாஹ்) என்று கூறவில்லை. (அஹ்மதிகள் தரப்பிலிருந்துதான் இத்தகைய குரல்கள் எழுந்தன.) ஆனால் அவர்கள் நல்ல முறையில் இறைவனின் தூதுச் செய்தியை எட்ட வைக்காத அந்த சமயத்தில் அவர்களது வஃபாத் நிகழ்ந்துள்ளது; சில முன்னறிவிப்புகளும் இன்னும் நிறைவேறவில்லை என்றே அவர்கள் கூறினர்.

**முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

அப்போது எனக்கு வயது 17 ஆக இருந்தது. இப்படிப்பட்ட சொற்களை நான் கேட்டதும் நான் அவர்களது சடலத்தின் தலைப்பகுதிக்கு அருகில் நின்றவாறு இறைவனை நோக்கி இவ்வாறு துஆ செய்தேன்.

இறைவா! இவர் உனக்கு பிரியமானவர் ஆவார். இவர் உயிருடன் இருந்த வரை இவர் உனது மார்க்கத்தை நிலைநிறுத்துவதற்காக அளவற்ற தியாகங்களைச் செய்தார். இப்போது அவரை நீ உன்னிடம் அழைத்துக் கொண்ட பிறகு மக்கள் இவர் அகால மரணம் அடைந்து விட்டார் என்று கூறுகின்றனர். இவ்வாறு கூறக்கூடியவர்களுக்கும் அல்லது இவர்களது மற்ற தோழர்களுக்கும் இவ்வாறான விஷயங்கள் அவர்களது தடுமாற்றத்திற்கு காரணமாக அமைந்து விடலாம். இதன் மூலமாக ஜமாஅத்தின் ஒற்றுமை சிதறுண்டு போகலாம். எனவே, இறைவா! நான் உன்னிடம் இந்த உடன்படிக்கையை செய்கின்றேன். முழு ஜமாஅத்தும் உனது மார்க்கத்தை விட்டு விலகிச் சென்று விட்டாலும் நான் இவருக்காக எனது உயிரை இவ்வழியில் அர்ப்பணித்தவாறு போராடுவேன்.

அப்போது இந்தப் பணியை நான்தான் செய்ய வேண்டும் என்பதை நான் புரிந்து கொண்டேன். இந்த விஷயம்தான் 19 வயதிலேயே எனது உள்ளத்திற்குள் எத்தகைய நெருப்பை நிரப்பி விட்டது என்றால், நான் எனது முழு வாழ்நாளையும் மார்க்க தொண்டாற்றுவதற்காக அர்ப்பணித்து விட்டேன். மற்ற எல்லா நோக்கங்களையும் கைவிட்டு விட்டு இந்த ஒரு நோக்கத்தை மட்டும் என் முன்னால் வைத்துக் கொண்டேன். அதாவது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்த பணிக்காக வந்தார்களோ அந்தப் பணியை இப்போது நான்தான் செய்ய வேண்டும். அப்போது எனது உள்ளத்தில் உருவாகிய அந்த உறுதிமிக்க எண்ணத்தை இன்றுவரை அதனை, அதன் புத்தம்புது இனிமையான சுவையுடன் என்னுள் உணர்கின்றேன். அந்த சமயத்தில் அவர்களது சடலத்தின் தலைப்பகுதிக்கு அருகில் நின்றவாறு நான் செய்த உடன்படிக்கை என்னை வழிநடத்திச் செல்கிறது. அந்த உடன்படிக்கைதான் இன்று வரை என்னை, என்னுடைய எண்ணத்தில் தீர்க்கமாக நிலைநிறுத்தியுள்ளது.

எதிர்ப்பின் நூற்றுக்கணக்கான புயல்கள் என் முன்னால் எழுந்தன. ஆனால் அவை இந்த பாறாங்கல்லுடன் மோதி தனது தலைகளையே உடைத்துக் கொண்டன. அதன் மீது அல்லாஹ் என்னை நிற்க வைத்திருந்தான். எனக்கு எதிராக செய்யப்பட்ட எதிரிகளின் ஒவ்வொரு முயற்சியும் ஒவ்வொரு திட்டமும் ஒவ்வொரு தீங்கும் தாமாகவே அவர்கள் பக்கமே திரும்பி விட்டது. இறைவன் தனது சிறப்பான அருள் மூலமாக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எனக்கு வெற்றிகளின் முகத்தைக் காட்டினான். எதுவரை என்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வஃபாத் ஆன சமயத்தில் அவர்களது மரணம் அகால மரணமாக இருந்தது என்று கூறிய அதே மக்கள் அவர்களது பிரச்சாரத்தின் வெற்றிகளைப் பார்த்து வியப்பில் மூழ்கியிருப்பவர்களாக இருப்பதைப் பார்க்க முடிந்தது.

அவர்கள் இருந்த சபையில் அன்னார் நிகழ்த்திய சொற்பொழிவை நான் எடுத்துக் கூறினேன். தொடர்ந்து அவர்கள் ஜமாஅத்திற்கு கவனமூட்டியவாறும் கூறுகின்றார்கள்:

இந்த ஆன்மாவை தன்னிடம் ஏற்படுத்திக் கொள்வது ஜமாஅத்திலுள்ள ஒவ்வொரு நபரது பொறுப்பாக இருக்கின்றது. அதாவது மார்க்கப் பணியை அவர்தான் செய்ய வேண்டும். அதாவது மார்க்கப் பணியைச் செய்கின்ற பொறுப்பும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பிரச்சாரத்தை முன்னேற்றமடையச் செய்கின்ற அந்த பொறுப்பும் என்னுடையதாகும் என்று அவர் கருத வேண்டும். எனவே, ஒரு உடன்படிக்கையை எடுத்துக் கொள்ளுங்கள். நான் எல்லா நிலையிலும் மார்க்கத் தொண்டாற்றுவதற்கு முக்கியத்துவம் கொடுப்பேன் என்று எவர் உடன்படிக்கை செய்து கொள்வாரோ அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு எந்த நோக்கத்தை அடைய வேண்டியது இருந்ததோ அதை அடைந்து விட்டார். அவர்களது பிரச்சாரத்தை முன்னேற்றமடையச் செய்வது தான் அந்த நோக்கமாகும். இந்த ஆன்மா நம்மிடம் உருவாகி விட்டால் எந்த துன்பமும் நமக்கு துன்பமாக தெரியாது. வழியில் தென்படும் எல்லா துன்பங்களும் சாதாரணமானதாக நமக்கு தெரியவரும்.

பிறகு இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக தனது உள்ளத்திலுள்ள வேதனையை வெளிப்படுத்தியவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

நாம் செய்ய வேண்டிய அசல் விஷயம் உலகில் இஸ்லாமிய தேசத்தை உருவாக்குவதாகும். மீண்டும் நாம் எல்லா முஸ்லிம்களையும் ஒரே கையின் கீழ் ஒன்றுசேர்க்க வேண்டும். மீண்டும் நாம் இஸ்லாத்தின் கொடியை உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் நாட்ட வேண்டும். நாம் மீண்டும் ஹஸ்ரத் முஹம்மது ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பெயரை கண்ணியத்துடனும், மரியாதையுடனும் உலகின் எல்லா எல்லைகளிலும் எட்ட வைக்க வேண்டும். நமக்கு பாகிஸ்தானின் கொடி உயரத்தில் பறப்பதிலும் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. நமக்கு எகிப்தின் கொடி உயரத்தில் பறப்பதிலும் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. நமக்கு அரபு நாட்டின் கொடி உயர்வாகப் பரப்பதிலும் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. நமக்கு ஈரானின் கொடி உயரத்தில் பறப்பதிலும் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. ஆனால் எல்லா நாடுகளும் தமக்குள் ஒற்றுமையாக இருந்து இஸ்லாமிய தேசத்தின் அடித்தளத்தை ஏற்படுத்தும்போதுதான் நமக்கு உண்மையான மகிழ்ச்சி ஏற்படும். நாம் இஸ்லாத்தை அதன் பழைய மகிமையுடன் மீண்டும் நிலைபெறச் செய்ய வேண்டும். நாம் இறைவனின் ஆட்சியை உலகில் நிலைநாட்ட வேண்டும். நாம் முஹம்மது ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஆட்சியை உலகில் நிலைநாட்ட வேண்டும். நாம் நீதியையும், நேர்மையையும் உலகில் நிலைநாட்ட வேண்டும். நீதி, நேர்மை ஆகியவற்றின் அடிப்படையில் பாகிஸ்தானை இஸ்லாமிக் யூனியனின் முதல் ஏணிப்படியாக ஆக்க வேண்டும். இந்த இஸ்லாமிய தேசம்தான் உலகில் உண்மையான அமைதியை நிலைநாட்டும்.

அந்தோ! பாகிஸ்தானின் பொதுமக்களும், இன்று அங்குள்ள தலைவர்களும், ஆலிம்களும் பாகிஸ்தானை உயரே கொண்டு செல்ல விரும்புபவர்களும் இந்த விஷயத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமே!

தொடர்ந்து கூறுகின்றார்கள்: அது உண்மையான அமைதியை நிலைநாட்டியவாறு ஒவ்வொருவருக்கும் அவருக்குரிய உரிமையை வழங்கும். எங்கு ரஷ்யாவும் அமெரிக்காவும் தோல்வி அடையுமோ அங்கு மக்காவும், மதீனாவும் மட்டும் தான் வெற்றி பெறும் இன்ஷா அல்லாஹ்.

கூறுகின்றார்கள்: இந்த விஷயங்கள் இந்த சமயத்தில் ஒரு பைத்தியக்காரனின் கூற்றாகத் தெரிகின்றது. ஆனால் உலகில் மகத்தான மாற்றங்களை ஏற்படுத்திய பல மக்களும் பைத்தியக்காரன் என்றே அழைக்கப்பட்டனர். என்னையும் மக்கள் பைத்தியக்காரன் என்று கூறுகின்றார்கள் என்றால் எனக்கு இதில் வெட்கப்படுவதற்கான எந்த விஷயமும் இல்லை. எனது உள்ளத்தில் ஒரு நெருப்பு இருக்கின்றது. ஒரு வேதனை இருக்கின்றது. ஒரு வெப்பம் இருக்கின்றது. அது எல்லா சமயங்களிலும் அமைதியிழந்த நிலையில் என்னை வைத்திருக்கின்றது. நான் இஸ்லாத்தை அதன் இழிவான இடத்திலிருந்து உயர்த்தி கண்ணியமிக்க இடத்திற்கு அதை கொண்டு சேர்க்க விரும்புகின்றேன். நான் மீண்டும் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பெயரை உலகின் எல்லா மூளைகளிலும் பரவும்படி செய்ய விரும்புகின்றேன். நான் மீண்டும் திருக்குர்ஆனின் ஆட்சியை உலகில் நிலைநாட்ட விரும்புகின்றேன். இந்த விஷயம் எனது வாழ்நாளில் நடைபெறுமா? அல்லது எனக்குப் பிறகு நடக்குமா? என்பது எனக்கு தெரியாது. இஸ்லாத்தின் மீது உயர்ந்த கட்டடத்திற்காக நான் எனது கைகளால் ஒரு செங்களை வைக்க விரும்புகின்றேன் அல்லது எத்தனை செங்கல்களை நான் வைக்க இறைவன் எனக்கு தவ்ஃபீக் வழங்குவானோ அத்தனை செங்கல்களை நான் வைக்க விரும்புகின்றேன் என்பதை நான் அறிவேன். நான் இந்த மகத்தான கட்டடத்தை எந்த அளவு உயரத்தில் கொண்டு செல்ல அல்லாஹ் எனக்கு தவ்ஃபீக் வழங்குவானோ அந்த அளவு அதை உயர்வாகக் கொண்டு செல்ல நான் விரும்புகின்றேன். எனது உடலிலுள்ள ஒவ்வொரு அணுவும், எனது ஆன்மாவில் உள்ள ஒவ்வொரு சக்தியும் இறைவனது அருளால் இந்தப் பணிக்காக செலவாகும். உலகின் எந்தவொரு பெரும் சக்தியும் எனது இந்த எண்ணத்தில் குறுக்கிடாது.

எனவே இவர்தான் அந்த மனஉறுதிமிக்க வாக்களிக்கப்பட்ட மகன் ஆவார்கள். அவர்கள் தமது உள்ளத்திலுள்ள துடிப்பைத் திறந்த நமக்கு முன்னால் வைத்துள்ளார்கள்.

முஸ்லிஹ் மவ்வூது தினத்தை இன்று நாம் அனுசரிக்கும் போது இந்த துடிப்பை இன்று நாம் நம்மில் பெரும்பாலாரிடம் உருவாக்கும் போதுதான் உண்மையான முஸ்லிஹ் மவ்வூது தினத்தை நாம் அனுசரிக்க முடியும். நமது நோக்கங்கள் மிகவும் உயர்வானதாகும். அவை மிகவும் மேன்மைவாய்ந்தவையாகும். அதை பெறுவதற்காக உயர்வான தைரியத்தை நாம் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். நம்மிடம் உயர்வான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். இறைவனிடத்தில் உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இஸ்லாம் பற்றிய வேதனையை நம்மிடத்தில் உருவாக்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது வைத்துள்ள பேரன்பையும் நேசத்தையும் உள்ளத்தில் ஒரு வேதனையை உருவாக்கியவாறு நாம் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும்.

அல்லாஹ் எண்ணற்ற சிறப்புகளுக்கு எஜமானராகத் திகழ்கின்ற ஒரு மகன் பற்றிய நற்செய்தியை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வழங்கியிருப்பது தன்னிடத்தில் ஓர் ஆழ்ந்த கருத்தைக் கொண்டதாக இருக்கின்றது. அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் உம்முடைய இந்த இயக்கம் உம்மோடு முடிந்து விடக் கூடியதல்ல. எந்தப் பிரச்சாரத்தை நீங்கள் எடுத்து வந்தீர்களோ அது உங்களது வாழ்நாளுடன் முடிந்துவிடக் கூடியதல்ல. மாறாக, இஸ்லாத்தை உலகில் பரப்ப வேண்டும் என்ற துடிப்பில் உமது இந்த மகன் உமது இரண்டாவது தோற்றமாகத் திகழ்வார். அவர் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கொடியை உலகில் நாட்டுவதற்காக அமைதியற்ற உள்ளம் உடையவராக இருப்பார். மேலும் இந்தப் பணி அவர்களது அந்த மகனுடன் மட்டும் முடிவடையாது. அதற்குப் பிறகும் இந்த பிரச்சாரத்தை உலகின் எல்லா மூளைகளிலும் கொண்டு செல்வதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அல்லாஹ் இறைவனது இந்த இரண்டாவது வல்லமையை வெளிப்படுத்தும் தோற்றம் கியாமத் வரை நீடிக்கும் என்று வாக்குறுதி வழங்கியுள்ளான். அது இந்தப் பணியை முன்னேற்றமடையும்படி செய்து கொண்டே செல்லும். இந்த இறைவனின் இரண்டாவது வல்லமைமிக்க தோற்றத்திற்கு எத்தகு சிறந்த உதவியாளர்கள் வழங்கப்படுவார்கள் என்றால் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த உண்மைப் பேரன்பரின் பிரச்சாரத்தை முன்னேற்றமடையும்படி செய்வதற்காக இறைவனின் இரண்டாவது வல்லமைமிக்க தோற்றம் கிலாஃபத்தின் வடிவில் நீடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து அதற்கு உதவி செய்பவர்களாக அவர்கள் ஆகிவிடுவார்கள்.

இன்று நமக்கு எங்கு முஸ்லிஹ் மவ்வூது தொடர்பான முன்னறிவிப்பானது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது உண்மைக்கான ஆதாரமாக தெரிகின்றதோ அங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இறைவன் எத்தகைய சிறப்புகளின் எஜமானராக இருக்கின்ற ஒரு மகனைப் பற்றிய தகவலைத் தந்தானோ அந்த மகன் எத்தகைய துடிப்புடனும் மன உறுதியுடனும் ஜமாஅத் முன்னேறிச் செல்வதற்கான வழிகளை அதற்குக் காட்டித் தந்துள்ளாரோ, அதற்காக அழகான அமைப்பை வழங்கினாரோ அப்படிப்பட்ட ஜமாஅத்திற்கு சீர்திருத்தத்தை வழங்கக்கூடிய அமைப்புடன் சேர்ந்து உலகின் எல்லா மூலைகளிலும் இஸ்லாத்தின் அழகான போதனையை எட்ட வைப்பதற்காக எத்தகைய அமைப்பை அவர்கள் உறுதியாக நிலைநிற்கும்படி செய்துள்ளார்கள் என்றால் அதன் விளைவுகள் ஒவ்வொரு நாளும் புதிய மகிமையுடன் வெளிப்பட்டுக் கொண்டே செல்கிறது. இந்த அமைப்புக்கு மேலும் வலுவூட்டுவதற்காக ஒவ்வொரு அஹ்மதியும் தனது பங்கை செலுத்தக் கூடியவராக இருக்க வேண்டும்.

இன்று அல்லாஹ்வின் அருளால் அரபு நாடுகளிலும் இந்த அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. ஆசியாவிலுள்ள ஏனைய நாடுகளிலும் இந்த அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. ஆப்பிரிக்காவிலும் இந்த அமைப்பு நிலைபெற்று விட்டது. ஐரோப்பாவிலும் இந்த அமைப்பு நிறுவப்பட்டு விட்டது. அமெரிக்காவிலும் இந்த அமைப்பு நிலைபெற்று விட்டது. ஆஸ்திரேலியாவிலும் இந்த அமைப்பு நிலைபெற்று விட்டது. தீவுகளிலும் இந்த அமைப்பு நிலைபெற்று விட்டது.

எனவே, எங்கு ஓர் அஹ்மதி ஒரு ஜமாஅத்தை நிறுவி இந்த அமைப்பின் ஒரு பகுதியாக ஆகியுள்ளாரோ அங்கு அவர் தன்னை சீர்திருத்திக் கொள்வதோடு மட்டும் இருந்து விடக்கூடாது. தனது அடுத்த தலைமுறையையும் அவர் பாதுகாக்க வேண்டும். நீங்களும் இந்த அமைப்பின் ஒரு பகுதியாக ஆகி உங்களது உயர்வான நோக்கத்தை அடைவதில் அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கொடியை உலகில் பறக்க விட்டவாறு ஏகத்தவத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதை நீங்கள் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது என்பதை அவர்களது உள்ளத்தில் பதியும்படி செய்ய வேண்டும். இதற்காக எல்லாவிதமான தியாகங்களும் செய்யத் தயாராக இருக்க வேண்டும். இந்த நோக்கத்தை அடையாத வரை அமைதியாக அமரக்கூடாது. உங்களது வருங்கால தலைமுறையிடம் இந்த ஆன்மாவை நீங்கள் ஊத வேண்டும். ஒருபோதும் இந்த மகத்தான நோக்கத்தை மரணிக்க விட்டு விடக் கூடாது.

இன்று உலகில் ஒவ்வொரு மூலையிலும் அஹ்மதிய்யா ஜமாஅத் நிறுவப்பட்டுள்ளது. காதியானிலிருந்து எழுந்த அந்த குரல் உலகில் எல்லா மூலைகளிலும் பரவிவிட்டது. சாதகமற்ற நிலைமைகள் இருந்தும் கூட உலகின் எல்லா மூலைகளிலும் இதைப் பரவச் செய்ததில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்கு பெரும் பங்கு இருக்கின்றது.

முஸ்லிஹ் மவ்வூது தொடர்பான முன்னறிவிப்பு நிறைவேறியதை நினைவு கூறும் வகையில் நாம் கூட்டங்களை நடத்தும் போது உங்களது மன உறுதியிலும், உங்களது நிகழ்ச்சிகளிலும் உங்களது உணர்வுகளை முழுமையாகப் புதுப்பிக்கின்ற அத்தகைய ஒரு ஆன்மாவை உருவாக்குங்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறியுள்ள அந்த விருப்பங்களையும் உங்கள் முன்னால் வையுங்கள். அதைப் பற்றி நான் கூறி விட்டேன்.

ஒவ்வொரு நாட்டிலும் வாழ்கின்ற அஹ்மதியும், இஸ்லாமிய தேசத்தை நிறுவ வேண்டும் என்பதற்காக முயற்சி செய்ய வேண்டும். அகில உலகங்களுக்கும் அருட்கொடையாக வந்த நமது எஜமானரும் தலைவருமாகிய ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் உருவாக்க விரும்பிய அந்த இஸ்லாம்ஸ்தானை நீங்கள் உருவாக்க வேண்டும். நம்மவருக்கும் மற்றவர்களுக்கும் உரிய உரிமைகளை வழங்கியவாறு மனிதத்தன்மையின் உயர் தகுதிகளை நிலைநாட்டக்கூடிய இஸ்லாம்ஸ்தானை உருவாக்க வேண்டும். அதன் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மனிதர்களுக்கு அருளாக இருந்தார்கள் என்பது உலகிற்கு தெரிய வேண்டும். உலகிற்கு இதைக் கூறுவது தான் மிகப்பெரிய பணியாகும். இதை உலகின் முன்பு எடுத்து வைக்க வேண்டும். ஒவ்வொரு இஸ்லாமிய நாட்டையும் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ள வைப்பதும் நமது நோக்கமாகும். இந்த விஷயங்களைத் தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)

அவர்கள் கொண்டு வந்தார்கள். இந்த விஷயங்களை நிறைவேற்றுவதற்காகத்தான் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அனுப்பியுள்ளான். இந்தப் பணியை இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் செய்ய வேண்டும். நாம் முஸ்லிம்களையும் ஒவ்வொரு இஸ்லாமிய நாட்டையும் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளும்படி செய்ய வேண்டும். இதுவே நமது நோக்கமாகும். நம்மை எதிர்ப்பதனால் இந்த மக்கள் நாம் கூறுவதை கேட்காவிட்டால் பிறகு துடியாய் துடித்து இவர்களுக்காக துஆ செய்ய வேண்டும். துஆ செய்வதிலிருந்தும் நம்மை யாரும் தடுக்க முடியாது. இதன் மூலமாக இவர்கள் இந்த விஷயத்தைப் புரிந்து கொள்பவர்களாக ஆக வேண்டும். பாகிஸ்தானாக இருந்தாலும் சரி, சவூது அரேபியாவாக இருந்தாலும் சரி, எகிப்தாக இருந்தாலும் சரி, சிரியாவாக இருந்தாலும் சரி ஈரானாக இருந்தாலும் சரி அல்லது சூடானாக இருந்தாலும் சரி அல்லது எந்த முஸ்லிம் நாடாக இருந்தாலும் இவர்கள் தனித்தனியாக இருந்து எந்த சார்க்கையும் நீங்கள் ஏற்படுத்த முடியாது என்பதை இந்த மக்களுக்கு நீங்கள் கூற வேண்டும். உங்களது சார்க் எப்போது உருவாக முடியும் என்றால், மேலும் நீங்கள் எஞ்சியிருப்பது எதில் இருக்கின்றது என்றால், மேலும் இந்த நாடுகள் பற்றிய திகில் எப்போது நிலைத்திருக்கும் என்றால் இவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து இஸ்லாத்தின் மகிமை தொடர்பாக சிந்திக்க வேண்டும். இந்த நாடுகளுக்கு இந்த தூதுச் செய்தியை நாம் வழங்க வேண்டும். இந்த நாடுகளுக்கு உள்ளே இருப்பவர்களும் இவற்றிற்கு பக்கத்திலுள்ள நாடுகளில் இருப்பவர்களும் எல்லா விதமான பிரிவுகளிலிருந்தும் விலகியவாறு இதைப் பற்றி சிந்திக்க வேண்டும். இன்று நாம் எகிப்திற்காகவும் முயற்சி செய்ய வேண்டும். சிரியாவிற்காகவும் முயற்சி செய்ய வேண்டும். லிபியாவிலுள்ள அறிவு படைத்த சான்றோர்களுக்கும் இந்த தூதுச் செய்தியை எட்ட வைக்க வேண்டும். நீங்கள் உங்களது கோத்திரங்களுக்கும் உங்களது பிரிவுகளுக்கும் முன்னுரிமை வழங்குபவர்களாக இருந்து அதற்காக அநீதியிழைத்து வந்தால் உங்களது கைகளாலேயே உங்களது நாடுகளை சீர்குலைப்பவர்களாக ஆகி விடுவீர்கள். இந்நிலையில் நாடு என்ற அளவிலும் சரி முஸ்லிம் உம்மத் என்ற நிலையிலும் சரி உங்களிடம் ஒருபோதும் ஆற்றல் உருவாகாது. மாறாக, பலவீனம் வளர்ந்து கொண்டே செல்லும். அந்நியர்கள் உங்களை தங்களது பிடியின் கீழ் கொண்டு வந்து விடுவார்கள். பிறகு இதனால் அடிமைத்தனத்தின் சங்கிலிகளில் சில நாடுகள் பிணைக்கப்படலாம். அல்லாஹ் அவ்வாறு செய்யாமல் இருப்பானாக. அல்லாஹ் அவ்வாறு செய்யாமல் இருப்பானாக.

எனவே, இவர்களுக்கு இந்த தூதுச் செய்தியை வழங்க வேண்டும். விழித்தெழுங்கள். உங்களது சுய நலனை அடைவதற்கு மட்டும் முயற்சி செய்யாதீர்கள். உங்களது கோத்திரங்கள் மற்றும் பிரிவுகளுக்கு தகாத முறையில் ஒருதலைப்பட்சமாக ஆதரவு காட்டாதீர்கள். அவ்வாறிருந்தால் பிறகு உங்கள் கைகளிலிருந்தும் எல்லாவற்றையும் நீங்கள் இழந்து விடுவீர்கள். இந்த நாடுகளின் தனித்தன்மையை நிலைநாட்டுவதற்குப் பதிலாக இஸ்லாத்தின் மகிமையை நிலைநாட்ட முயற்சி செய்யுங்கள். அல்லாஹ் இந்த மகத்துவத்தை நிலைநாட்டுவதற்காக எந்த நபரை அனுப்பியுள்ளானோ அவர் கூறும் விஷயங்களை சிந்தனை செய்யுங்கள். இந்த மகத்தான நோக்கத்தை அடைவதற்காக சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப இவர்களுக்கு புரிய வைப்பதன் மூலமாகவும் துஆக்களின் மூலமாகவும் ஒவ்வொரு நாட்டிலுள்ள அஹ்மதியும் இவ்விஷயத்தை தனது பங்கை செலுத்த வேண்டும். கடந்த வருடம் நான் கூறியது போன்றே நம்மில் ஒவ்வொரு அஹ்மதியும் உலகின் சீர்திருத்தத்திற்காக முயற்சி செய்தவாறு அவரும் முஸ்லிஹ் ஆக அதாவது சீர்திருத்தவாதியாக ஆக வேண்டும். அதன் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது பிரச்சாரத்தை நிறைவடைய செய்வது, இன்னும் சொல்வதென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் உலகை கொண்டு வருவதற்காக தீட்டப்பட்ட ஒரு மகத்தான திட்டத்தை செயல்படுத்துவது ஆகியவையே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் மகத்தான நோக்கமாகும். அதை நாம் நிறைவேற்ற முடியும். குழப்பங்களில் மக்கள் முன்னேறிச் செல்கின்ற இந்த காலகட்டத்தில் மிகப்பெரும் சக்திகளின் பார்வையும் இஸ்லாமிய நாடுகளில் உள்ள வளங்கள் மீது பதிந்துள்ளன. இதற்காக மிக அதிகமாக முயற்சி செய்தவாறு அஹ்மதிகளாகிய நாம் ஒவ்வொரு இஸ்லாமிய நாட்டையும் முஸ்லிம் உம்மத்தையும் பேராசைக்காரர்களின் பேராசையிலிருந்தும் விடுவிப்பதற்காக நமது எல்லைக்குள் இருந்தவாறு தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இதற்காக எல்லாவற்றையும் விட அதிகமாக துஆ செய்ய வேண்டும்.

அல்லாஹ் முஸ்லிம் நாடுகளிலுள்ள அரசியல்வாதிகளுக்கும் தலைவர்களுக்கும் அறிவையும் புரியும் திறனையும் வழங்குவானாக! தங்களது சுயநலத்தை விட்டு விட்டு அவர்கள் இதுபற்றி சிந்திக்க வேண்டும். ஆலிம்களாக இருப்பவர்களை பொதுமக்கள் அவர்களது அறிவிலும், ஆன்மீகத்திலும் முன்னேறி இருப்பவர்களாகக் கருதுகின்றனர். அவர்களும் அறிவுடன் செயல்பட வேண்டும். தங்களது சுய பயன்களைப் பெறுவதற்குப் பகரமாக திருக்குர்ஆனின் போதனைகளைப் புரிவதற்கு அவர்கள் முயற்சி செய்ய வேண்டும். அவர்கள் தங்களது சுய இலாபத்திற்காக பொதுமக்களையும் ஆட்சியாளர்களையும் சண்டை போட வைப்பதற்குப் பதிலாக தக்வாவுடன் செயல்பட வேண்டும். இதற்கான சிறந்த தீர்வு காலத்தின் இமாமின் குரலைக் கேட்டு அதற்கேற்ப செயல்படுவதேயாகும். பொதுமக்களும் தங்களது தொலைநோக்குப் பார்வைக்கான ஒளியை அதிகமாக்கிக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். காலத்தின் நிலைமைகளைக் கண்ட பிறகும் கண்களை மூடியவாறு அறிவு, ஞானம் ஆகியவற்றை முற்றிலும் கைவிட்டு விட்டு பேசுகின்றவர்கள் – அவர்கள் ஆலிம்களாக இருந்தாலும் சரி – தலைவர்களாக இருந்தாலும் சரி குருட்டுத்தனமாக அவர்களைப் பின்பற்றிச் செல்லாதீர்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தியது போன்று ஒரு அழகான இஸ்லாமிய தேசத்தைப் பார்ப்பவர்களாக அல்லாஹ் இவர்களை ஆக்குவானாக. இந்த ஒரு தீர்வு மட்டும்தான் உலகை குழப்பத்திலிருந்தம் காப்பாற்ற முடியும். உலகத்திற்கு இந்த அறிவு கிடைக்கும்படி அல்லாஹ் செய்வானாக.

இன்று ஒரு ஜனஸா ஹாஸிர் இருக்கின்றது. ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு வெளியே வந்து இந்த ஜனாஸா தொழுகையை நான் தொழ வைப்பேன். சகோதரர்கள் பள்ளிவாசலிலேயே இருக்க வேண்டும். இது அன்பிற்குரிய ஷேக் முஸவ்வர் அஹ்மது உடைய ஜனாஸாவாகும். இவர் மதிப்பிற்குரிய நஸீர் அஹ்மது சாஹிபின் மகனாவார். இவர் 2012 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14ம் தேதி சிறிது காலம் உடல்நலமின்றி இருந்த பிறகு தமது 25 வயதில் இவர் வஃபாத்தாகி விட்டார். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். இவருக்கு Muscular Dystropy என்ற நோய் இருந்தது. இந்த நோயின் விளைவாக வயது அதிகரிக்கும் போது தசைகள் உடல்நிலை குன்றிய நிலையிலும் பலவீனமடைந்து விடும். இவர் பெனிங்கம் ஜமாஅத்தில் பல்வேறு பொறுப்புகளில் தொண்டாற்றும் நற்பாக்கியத்தைப் பெற்றார். அவரிடம் எந்தப் பணி ஒப்படைக்கப்பட்டாலும் அதை முழுமையான கவனத்துடனும் பொறுப்புணர்வுடனும் அவர்கள் நிறைவேற்றி வந்தார்கள். சுறுசுறுப்புடனும் உழைத்தவாறும் பணிகளைச் செய்து வந்தார்கள். சந்தாக்களில் பங்கு பெறுபவராக இருந்தார்கள். நல்ல மனிதராகவும், மார்க்கத்துடன் தொடர்புடையவராகவும் கிலாஃபத்துடன் குறிப்பான தொடர்பு வைப்பவராகவும் மனத்தூய்மையுள்ள மனிதராகவும் அவர் இருந்தார். மிகவும் கூர்மையான அறிவுள்ளவராக இருந்தார். உடல்நலம் குன்றிய நிலையிலும் இவர் படிப்பை நிறைவு செய்தார். வங்கியில் பணியாற்றியவாறு முன்னேறி வங்கியில் Assistant Vice President என்ற பொறுப்பில் இப்போது பணியாற்றி வந்தார்கள். மேலதிகாரிகள் இவர்களது பணிகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தார்கள். பெற்றோர்களை தவிர இவருக்கு ஒரு சகோதரர் இருக்கின்றார். அந்த சகோதரரும் தசை சம்பந்தமான நோயால் பாதிக்கப்பட்டவர் தான். இங்கிலாந்தில் முபல்லிக் ஆக இருந்த ஷேக் முபாரக் அஹ்மது சாஹிப் அவர்களது சகோதரரின் பேரராவார். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்புடன் பறிமாறுவானாக. தனது திருப்தியின் சொர்க்கத்தில் அவருக்கு இடமளிப்பானாக. அவருடன் தொடர்புள்ளவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் அவரது சகோதரருக்கும் அழகிய பொறுமையை மேற்கொள்ளும் தவ்ஃபீக்கை வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 17.02.2012**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA

ASHURA EAST STREET, MELAPALAYAM,

TIRUNELVELI – 627 005.

TELEFAX : 0462 - 2352456